**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>**

**<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>**

**<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>**

**<u>MCOP. No. 57/2022</u>**

பெயர் :–மோகனசுந்தரம் (R.W.–1)
த/பெ. :– குப்புசாமி
தேதி :– 22.10.2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

இந்த வழக்கு சம்பந்தப்பட்ட TN 22 AR 2787 என்ற Hyundai Santro XO காரை நான் எப்போது விற்றேன் என்றால் 09.01.2021 அன்று விற்றேன், மேற்படி காரை யாரிடம் விற்றேன் என்றால் செண்பகா கார் பிரைவேட் லிமிடெட். True Value Pondicherry என்ற நிறுவனத்திடம் விற்றேன். மேற்படி காருக்கு ஏதேனும் காப்பீடு உண்டா என்றால், மேற்படி காரை விற்பதற்கு முன்னால் HDFC ERGO என்ற காப்பீடு நிறுவனத்தில் 11.07.2020 முதல் 10.07.2021 வரை காப்பீடு செய்து வைத்திருந்தேன். அதன் பிறகு ஏதேனும் காப்பீடு செய்தேனா என்றால், காரை விற்றுவிட்டேன் அதனால் காப்பீடு செய்யவில்லை. நீங்கள் விற்பனை செய்த காரை யார் வாங்கினார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் திருமுருகன் என்பவர் வாங்கினார். எப்போது வாங்கினார் என்று தெரியுமா என்றால் தெரியவில்லை. மேற்படி செண்பகா கார் பிரைவேட் லிமிடெட். True Value Pondicherry என்ற நிறுவனத்திடம் கேட்டால் தான் தெரியும். மேற்படி காரை விற்றது சம்பந்தமாக RTO அலுவலகத்திடமும், உங்கள் காப்பீட்டு நிறுவனத்திடமும் தகவல் தெரிவித்துள்ளீர்களா என்றால், மேற்படி செண்பகா கார் பிரைவேட் லிமிடெட் True Value Pondicherry நிறுவனம் மேற்படி திருமுருகன் அவர்களிடம் R.C.யில் பெயர் மாற்றம் செய்து விற்ற காரணத்தினால் RTO அலுவலகம் மற்றும் காப்பீட்டு நிறுவனத்திடம் நான் தெரியப்படுத்தவில்லை. மேற்படி வழக்கு விபத்து சம்பந்தமாக எப்போது விபரம் தெரியும் என்றால் வழக்கு சம்மன் எனக்கு வந்த பிறகு தான் தெரியும். நான் காரை விற்பனை செய்ததற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் விற்பனை ரசீது மற்றும் Delivery ரசீதினை (Expt. R3 & R4) தாக்கல் செய்துள்ளேன்.

மேற்படி விபத்தினை ஏற்படுத்திய நான்கு சக்கர வாகனத்திற்கு 3ம் எதிர்மனுதாரர் அலுவலகமான யுனெடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திடம்

காப்பீடு செய்துள்ளீர்களா என்றால் 09.01.2021 அன்றைய தேதியில் மேற்படி வாகனத்தை நான் விற்ற காரணத்தினால் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் நான் காப்பீடு செய்யவில்லை. யார் காப்பீடு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. 1ம எதிர்மனுதாரருடன் சேர்ந்து நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.